**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 472/2010**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 21 |
| Name | : என்.கர்ணன் |
| Father/Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.10.2022.

**முதல் விசாரணை.**

நான் தற்போது சூளைமேடு காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியிலிருந்து வருகிறேன். கடந்த 10.05.2009 அன்று சிபிசிஐடி பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது எஸ்2 ஏர்போர்ட் காவல் நிலையம் குற்ற எண் 65/2009 பிரிவுகள் 12(1)(எ), 12(2) இந்திய கடவுச்சீட்டு சட்டம் உ/இ இதச பிரிவுகள் 468, 471, 420 ன் கீழ் வழக்கை தொடர் விசாரணைக்காக சிசிபி யில் இருந்து சிபிசிஐடிக்கு மாற்றலான வழக்கு கோப்பை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கு கோப்புக்களை பார்வையிட்டேன். வழக்கு கோப்பை என்னிடம் ஒப்படைத்த தேவேந்திரன் என்பரை விசாரித்தேன். அவரைத் தொடர்ந்து முதன்மைக் குடிமையியல் அலுவலர் மற்றும் புகார்தாரரான நாகராஜ் என்பவரை விசாரித்ததில் அவர் ஏற்கனவே தேவேந்திரன் என்பவரிடம் வாக்குமூலம் அளித்ததால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

எஸ்–2 ஏர்போர்ட் காவல் நிலைய அலுவலர் சிவா என்பரை விசாரித்தேன். தலைமைக்காவலர் கண்ணியப்பன் என்பவர் மூலம் இவ்வழக்கின் எதிரி அம்ஜத்

என்பவரை தாம்பரம் நீதித்துறை நடுவர் எண்–1 என்பவரிடம் ஆஜர் செய்து அவருடைய வாக்குமூலத்தை நீதித்துறை எண்–1 திரு.சரவணன் என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. <u>**அந்த 164 கு.வி.மு.ச ன் படியான வாக்குமூலம் அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**</u> அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி வழக்கின் மற்றொரு எதிரியான வேலுமணி என்பவரை 19.07.2009 அன்று காலை 8.20 மணிக்கு சென்னை அம்மத்தூர் கண்ணன் கோவில் தெருவில் சாட்சிகள் அறிவழகன், பிரியா ஆகியோர் முன்னிலையில் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அவரிடமிருந்து இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி போலியாக, சுயலாபம் அடையும் நோக்கத்தில் தயார் செய்து வைத்திருந்த 25 ஆவணங்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி அந்த ஆவணங்களை படிவம்–95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி ஒ<u>**ப்புதல் வாக்குமூல சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**</u> அதன் பிறகு 2 ஆம் எதிரி வேலுமணியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

சாட்சி ஸ்ரீநிவாஸ் என்பவரை விசாரித்ததில் 2 ஆம் எதிரி வெளிநாடு செல்வதற்கு மருத்துவ பரிசோதனை நடத்திய விபரங்களைப் பெற்றேன். 1 ஆம் எதிரியின் உறவினர் முகம்மது ரபிதுல்லா என்பவரை விசாரித்ததில் அவர் பணப்பரிவர்த்தனை மேற்கொண்டுள்ளது தெரிய வந்தது. மேலும் 1 ஆம் எதிரியின் தயால் அம்ரு நிஷா என்பவரை விசாரித்ததில் பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டது தெரியவந்தது. மேலும், இந்திய வங்கி பெரம்பலூர் கிளையில் பணிபுரிந்த இராஜேந்திரன் என்பரை விசாரித்ததில் 2 ஆம் எதிரியின் வங்கிக்கணக்கு விபரங்களைப் பெற்றேன். மேலும், 2 ஆம் எதிரியின் நண்பர் ஜோதி என்பவரை விசாரித்ததில் இந்தியன் வங்கியில் ஜோதியின் கணக்கு மூலம் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டது தெரியவந்தது. 2 ஆம் எதிரி மேற்படி ஜோதியின் கணக்குமூலம் சுயலாபம் அடையும் பொருட்டு செயல்பட்டிருப்பது தெரியவந்தது.

மேலும், இந்தியன் வங்கி ஆத்தூர் கிளை மேலாளர் எஸ்.குலோத்துங்கன் என்பவரை விசாரித்ததில் அவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவரிடம் இருந்து 2 ஆம் எதிரியின் வங்கிக்கணக்கு விபரங்களைப் பெற்றேன். அந்த வங்கிக் கணக்கில் அவரின் மனைவி மகாலட்சுமி பெயருக்கு பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டது தெரியவந்தது. (அது ஏற்கனவே நீதிமன்றத்தில் அ.சா.9 மூலம் அ.சா.ஆ.13 ஆககுறியீடு

செய்யப்பட்டுள்ளது). மேலும் 2 ஆம் எதிரி சுயலாபம் அடையும் பொருட்டு மணப்புரம் பினான்ஸ் எல்டாம்ஸ்ரோடு கிளையில் 1 ஆம் எதிரிக்கும் 2 ஆம் எதிரிக்கும் இடையில் உள்ள பணப்பரிவர்த்தனை விபரங்களை மேற்படி நிறுவனத்தின் கிளை மேலாளர் சுரேஷ் என்பரை விசாரித்து அவர் மூலம் அ.சா.ஆ.14 முதல் அ.சா.ஆ.17 ஐ பெற்றேன்.

அதைத் தொடர்ந்து சாட்சி ஜோதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஜோதி என்பவர் மகாலட்சுமி என்பவருடன் பணிபுரிந்தவர். அதைத் தொடர்ந்து 2 ஆம் எதிரியின் மனைவி மகாலட்சுமியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 2 ஆம் எதிரி வேலுமணியின் சொந்த ஊரான கள்ளக்குறிச்சி சென்று ஊர்த்தலைவர் ஜெகதீசன் என்பவரை விசாரித்ததில் 2 ஆம் எதிரியானவர் லிங்கம் டிராவல்ஸ் என்பதை நடத்தி வருவதாகவும், அந்த வகையில் பல நபர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக கூறி அனுப்பி வைக்காமல் மோசடி செய்துள்ளது தெரியவந்தது.

2 ஆம் எதிரியால் ஏமாற்றப்பட்ட மருதமுத்து மகன் ஜோதிலிங்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் ஜோதி லிங்கத்திடம் ரூ.50,000/- பெற்றுகொண்டு ஏமாற்றியதாக தெரியவந்தது. அதேபோல் அர்ஜீனன் என்பவரையும் எதிரியால் மோசடி செய்யப்பட்டது தெரியவந்தது. மேலும், ரங்கநாதன் என்பவர் எதிரியால் ஏமாற்றப்பட்டார் என்று விசாரணையில் தெரியவந்தது. அதன் பிறகு, சுப்ரமணியன் என்ற ஆத்தூர் இந்தியன் வங்கிக் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்தவரை விசாரித்து 2 ஆம் எதிரியின் மனைவி மகாலட்சுமியின் வங்கி கணக்கு விபரங்களைப் பெற்றேன். அது ஏற்கனவே அ.சா.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிறகு பாலிடெக்ஸ் மெடிக்கல் பேமிலி கிளினிக்கில் கஸ்டமர் கோஆர்டினேட்டராக பணிபுரியும் சபீக் ரகுமான் என்பவரை விசாரித்ததில் அந்த மையத்தில் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் சென்ற விபரம் தெரியவந்தது.

மேலும், 1 ஆம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போலியான விசாவை உண்மைத் தன்மை அறியும் பொருட்டு சிபிஐ க்கு எனது உயர் அதிகாரியான துறைத்தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. <u>**அந்த 04.06.2009, 10.05.2009 மற்றும் 23.06.2009 ஆகிய தேதிகள் இட்ட ஆவணங்கள் அ.சா.ஆ.21 முதல் அ.சா.ஆ.23 வரை குறியீடு செய்யப்படுகிறது.**</u>

அதன் பிறகு, <u>**எதிரிகளின் குற்ற வழக்கு தொடர்பாக Sanction of Prosecution அனுமதி பெற்றேன். அது தொடர்பான வேண்டுகோள் கடிதம், அனுமதி கடிதம்**</u>

**உள்ளிட்ட நான்கு ஆவணங்களான 22.07.2010, 15.07.2010, 18.05.2010 மற்றும் 03.05.2010 தேதியிட்ட Gazette Publication ஆகிய ஆவணங்கள் முறையே அ.சா.ஆ.24 முதல் அ.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(அரசு தரப்பின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Sd. xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.